(6) அறிவிப்பு

தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிதி ஒதுக்க (3-ம் எண்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு, 1972-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (3-ம் எண்) சட்ட முன்வடிவை சட்டப் பேரவையில் அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் மேதகு ஆளுநர் அவர்கள் தம்முடைய பரிந்துரையை அளித்துள்ளார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(3) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு நிதி ஒதுக்க (3-ம் எண்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு நிதி ஒதுக்க (3-ம் எண்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஈ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/72) (கூட்டாய்வுக்குழு திருத்தியமைத்தவாறு)—தொடர்ச்சி.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, தொழிலாளர் நல நிதி எந்த எந்த வகைகளில் செலவு செய்யப்படவேண்டுமென்று இந்த மசோதாவில் கூறப்பட்டிருக்கிறது. அதில் இந்த நிதியைச் சமுதாய வளர்ச்சித் திட்டங்களுக்குச் செலவிடவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் அரசாங்கத்தின் செலவிலேயே இதுவரை செய்யப்பட்டு வருகின்றன. முதலாளிகளும் செய்கிறார்கள். அப்படி இருக்கிறபோது சமுதாயத் திட்டங்களை தொழிலாளர் நல நிதியில் இருந்து செலவிடவேண்டும் என்பதை நான் ஏற்கவில்லை. இதற்கு அவசியம் இல்லை என்று கருதுகிறேன். மாறாக இந்த நிதியைக்கொண்டு தொழிலாளர்களுக்கே நேரிடையாகப் பயன்படுகிற வகையில் அவர்களுக்கு லோன் வழங்குவது, பாடப்புத்தகம், பீஸ் முதலியவை கட்டுவதற்கு உதவுவது ஆகிய காரியங்களுக்குச் செலவிட வேண்டுமென்று நான் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பல பெரிய நிறுவனங்கள் தங்கள் வருவாயை இன்கம் டாக்சில் இருந்து தப்பித்துக்கொள்ள ஒளிப்பதற்காக தொழிலாளர் நலத்திட்டங்களுக்குச் செலவிடுவதாக பொய்யாகக் கணக்குக் காட்டிவிடு